## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions
} CC.No. 271/2012

Deposition Of Witness for { Prosecution PW 2 / Defense / Court

Name: திரு. இன்பராஜன்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion: Muslim/Christian/Hindu

Age: /2025

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of November 2025.

நான் தற்போது காவல்துறையில் பணிபுரிந்து பணி ஓய்வுபெற்றுள்ளேன். இதற்கு முன்பு களக்காடு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 25.02.2012ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு காவல் ஆய்வாளர், நான், அ.சா.1 என்பவரும் மணல் திருட்டு சம்பந்தமாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் பத்மனேரி பாலத்திற்கு கீழ்புறம் கீழவடகரை செல்லும் ரோட்டில் கண்காணித்துவரும்போது அந்த ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக வந்த TN 72 Q 0878 என்ற எண் கொண்ட டிராக்டரை நாகல்குளம் கீழதெருவைசேர்ந்த சொரிமுத்து மகன் அருண் என்பவர் ஓட்ட அந்த டிராக்டருடன் இணைந்த டிரைலர் TN 72 A 4355–ல் களக்காட்டைச்சேர்ந்த மகாராஜன் மகன் சுந்தர் என்பவர் அமர்ந்தபடி வந்தவர்கள் போலீஸ் பார்டி எங்களை கண்டதும் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி தப்பி ஓடியவர்களை போலீஸார் பார்டியாகிய நாங்கள் துரத்தி பிடிக்க அருண் மட்டும் பிடிபட்டார். சுந்தர் என்பவர் தப்பி தலைமறைவாகிவிட்டார். பின்பு சம்பவயிடத்திற்கு வந்து டிராக்டரை பார்வையிட்டபோது அதனுடன்

இணைந்த டிரைலரில் சுமார் 1 யூனிட் அளவு ஆற்று மணல் இருந்தது. அதன் மதிப்பு சுமார் ரூ.2000/– இருக்கும். பிடிபட்ட அருண் என்பவரிடம் விசாரணை செய்தபோது சுந்தர், தானும் பச்சையாற்றிலிருந்து மணலை திருடி வந்ததாக தெரிவித்தார் தெரியவந்தது. அந்த மணலை எடுத்து வர அனுமதி சீட்டு இல்லை. அதனால் காவல் ஆய்வாளர் அவர்கள் பிடிப்பட்ட அருணை சட்டவிரோதமாக லாபம் நோக்கம் கருதி ஆற்றுமணலை திருடிய குற்றத்திற்காக கைது செய்து சம்பவயிடத்திலிருந்த சுமார் 1 யூனிட் அளவு ஆற்றுமணலுடன் கூடிய டிரைலரையும், டிராக்டரையும் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள். பின்பு கைப்பற்றபட்ட சொத்துக்களையும், பிடிப்பட் அருண் என்பவரையும் 13.30 மணிக்கு நிலையம் கொண்டுவந்து வழக்கு பதிவுசெய்ய காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அது **<u>அ.சா.ஆ.2</u>** ஆகும். ஆய்வாளர் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முதல்விசாரணையில் மணல் ரூ.2000/– மதிப்பு இருக்கும் என ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் கூறவில்லை. மணலை மதிப்பீடு செய்வதற்கு சிறப்பு பயிற்சி எதுவும் பெற்றிருக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மணலை பொதுப்பணிதுறையினரிடம் ஒப்படைத்து சான்றிதழ் எதுவும் வாங்கவில்லை என்றால் ஆய்வாளருக்குதான் தெரியும். சம்பவநேரத்தில், சம்பவயிடத்தில் பணியில் இருந்தேன் என்பதை காவல்துறையின் பொதுநாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பை பார்த்தால் நான் சம்பவநேரத்தில் சம்பவயிடத்தில் இருந்தது தெரியும் என்றால் சரிதான். ஆற்றிலிருந்து மணல் எங்கிருந்து அள்ளப்பட்டது எனவும், எங்கு கொண்டுசெல்லப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கையெப்பம் செய்த அத்தாட்சியில் TN 72 A 4355 எண்ணுள்ள டிரைலரில்தான் மணல் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 72 A 4355 எண்ணுள்ள டிரைலரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார்களா என்றால் ஆய்வாளருக்குதான் தெரியும். சம்பவயிடத்தில் எதிரி அருணை பிடித்ததாக சொல்லப்படுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கூறுவது போல எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபரத்திற்காக மேலதிகாரியின் உத்தரவின்பேரில் இவ்வழக்கு எதிரிகள் மீது பொய்யாக பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அரசு ஊழியர் என்பதால் அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எதிரிகள் நீங்கள் கூறுவது போல திருட்டுதனமாக மணல் எதுவும் கடத்தவில்லை என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 271/2012 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 1 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. அந்தோணி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of November 2025.

நான் தற்போது முக்கூடலில் வசித்து வருகிறேன். தற்போது திருநெல்வேலி மாவட்டம் இருப்புப்பாதை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு களக்காடு காவல்நிலையத்தில் இரண்டாம் காவலராக பணியில் இருந்தபோது 25.02.2012ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு காவல் ஆய்வாளர், நான், சிறப்பு உதவி ஆய்வாளர் இன்பராஜ் என்பவரும் மணல் திருட்டு சம்பந்தமாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் பத்மனேரி பாலத்திற்கு அடியில் கீழவடகரை செல்லும் ரோட்டில் கண்காணித்துவரும்போது அந்த ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக வந்த TN 72 Q 0878 என்ற எண் கொண்ட டிராக்டரை நாகல்குளம் கீழதெருவைசேர்ந்த சொரிமுத்து மகன் அருண் என்பவர் ஓட்ட அந்த டிராக்டருடன் இணைந்த டிரைலர் TN 72 A 4355–ல் களக்காட்டைச்சேர்ந்த மகாராஜன் மகன் சுந்தர் என்பவர் அமர்ந்தபடி வந்தவர்கள் போலீஸ் பார்ட்டி எங்களை கண்டதும் வண்டியை நிறுத்திவிட்டு

இறங்கி தப்பி ஓடியவர்களை போலீஸார் பார்டியாகிய நாங்கள் துரத்தி பிடிக்க அருண் மட்டும் பிடிபட்டார். சுந்தர் என்பவர் தப்பி தலைமறைவாகிவிட்டார். பின்பு சம்பவயிடத்திற்கு வந்து டிராக்டரை பார்வையிட்டபோது அதனுடன் இணைந்த டிரைலரில் சுமார் 1 யூனிட் அளவு ஆற்று மணல் இருந்தது. பிடிபட்ட அருண் என்பவரிடம் விசாரணை செய்தபோது சுந்தர், தானும் பச்சையாற்றிலிருந்து மணலை திருடி வந்ததாக தெரிவித்தார் தெரியவந்தது. அந்த மணலை எடுத்து வர அனுமதி சீட்டு இல்லை. அதனால் காவல் ஆய்வாளர் அவர்கள் பிடிப்பட்ட அருணை சட்டவிரோதமாக லாபம் நோக்கம் கருதி ஆற்றுமணலை திருடிய குற்றத்திற்காக கைது செய்து சம்பவயிடத்திலிருந்த சுமார் 1 யூனிட் அளவு ஆற்றுமணலுடன் கூடிய டிரைலரையும், டிராக்டரையும் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் சாட்சியாக கையெப்பமிட தனிநபர்கள் யாரும் முன்வராததால் போலீஸ் பார்டியினரான நானும், இன்பராஜ் என்பவரும் கையெழுத்து செய்தோம். பின்பு கைப்பற்றபட்ட சொத்துக்களையும், பிடிப்பட் அருண் என்பவரையும் 13.30 மணிக்கு நிலையம் கொண்டுவந்து வழக்கு பதிவுசெய்ய காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.1** ஆகும். ஆய்வாளர் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் அத்தாட்சியை யார் தயார் செய்தார் என்றால் ஆய்வாளர் தயார் செயதார். இவ்வழக்கில் அத்தாட்சியை தயார் செய்த ஆய்வாளர்தான் புகார்தாரர் என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தவர் ஆய்வாளர் என்றால் சரிதான். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஆய்வாளர் என்றால் சரிதான். சம்பவநேரத்தில் சம்பவயிடத்தில் பணியில் இருந்ததற்கான விபரத்தை பாக்கெட் டைரியில் எழுதியிருப்பேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் பாக்கெட் டைரி விபரத்தை ஆய்வாளரிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் சம்பவநேரத்தில் நான் சொல்வது போல சம்பவயிடத்தில் பணியில் இல்லை என்பதால்தான் பாக்கெட் டைரியை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு எதில் சென்றோம் என்றால் ஆய்வாளர் வாகனத்தில் சென்றோம். அத்தாட்சியை தயார் செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் அரை மணிநேரம். சம்பவயிடத்திலிருந்து களக்காடு காவல்நிலையத்தில் வாகனத்தில் அரை மணிநேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். அத்தாட்சி எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்ட விபரம் துலங்காது என்றால் சரிதான். அத்தாட்சி தயார் செய்தபிறகு சம்பவயிடத்தில் எவ்வளவு மணி நேரம் இருந்திருப்போம் என்றால் சுமார்

ஒரு மணிநேரம் இருந்திருப்போம். ஆற்றின் எந்த பகுதியில் மணல் எடுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். டிரைலர் மற்றும் டிராக்டரை கைப்பற்றியபோது மணலை அள்ளுவதற்கான மண்வெட்டி போன்ற உபகரணங்கள் இல்லை என்றால் சரிதான். டிராக்டரில் உள்ள மணல் எந்த இடத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேலவடகரை, கீழவடகரையில் உள்ள நபர்கள் அந்த வழியாகதான் வெளியூர் செல்வார்கள் என்றால் சரிதான். போக்குவரத்து உள்ள பகுதிஎன்றால் சரிதான். பாலத்திற்கு மேற்பகுதியில் ரோட்டின் இருபுறமும் பஸ்ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். பாலத்தின் வழியாக சேரன்மாதேவி, களக்காடு செல்லும் போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரிதான். எங்களை பார்த்ததும் எவ்வளவு துாரத்தில் எதிரிகள் வண்டியை நிறுத்திவிட்டு ஓடினார்கள் என்றால் சுமார் 100 அடி துாரத்தில் எதிரிகள் வண்டியை நிறுத்திவிட்டு ஓடினார்கள். கைப்பற்றப்பட்ட வாகனம் யாருக்கு சொந்தமானது என்பதை ஆய்வாளர் பார்க்கவில்லை என்றால் வாகனத்தில் ஆவணங்கள் எதுவும் இல்லை,எதிரிகள் சொல்வதை வைத்துதான் உரிமையாளர் யார் என முடிவெடுத்தோம். அத்தாட்சியை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அத்தாட்சியில் TN 72 A 4355 என்ற டிரைலரில் மணலுடன் கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டுள்ளதாக சொல்லப்படும் மணல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல எந்த மணலுடன் கூடிய டிரைலர் கைப்பற்றப்படவில்லை என்பதால்தான் மணலோ, மேற்படி TN 72 A 4355 என்ற டிரைலரோ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. மணல் திருட்டு நடந்ததாக கூறுவது பொய் என்பதால்தான் ஆற்றில் எந்த இடத்தில் மணல் திருட்டு நடந்த விபரம் பற்றி கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபரத்திற்காக மேலதிகாரியின் வற்புறுத்தலின்பேரில் இவ்வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. அரசு ஊழியர் என்பதால் அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நீங்கள் கூறுவது போல திருட்டுதனமாக மணல் எதுவும் கடத்தவில்லை என்றால் சரியல்ல.